# புதுச்சேரி அரசு
# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்துறை

## மின்னல் மற்றும் இடி
## செய்யவேண்டியவைகள் மற்றும் செய்யக்கூடாதவைகள்

### செய்யவேண்டியவைகள் (வெளியிடங்களில்)



1. நீங்கள் வெளிப்புறமாக இருந்தால், மின்னலிலிருந்து தங்களை காத்துக்கொள்ள தகுந்த இடத்தை தேடுங்கள். தங்களை மின்னலிலிருந்து காத்துக்கொள்ள கட்டிடங்கள் மிகச்சிறந்தது, ஆனால் அருகில் கட்டிடங்கள் இல்லை என்றால், நீங்கள் ஒரு மறைவான குகை, பள்ளம் அல்லது பள்ளத்தாக்கில் பாதுகாப்பைக் காணலாம். எந்த காரணத்துக்காகவும் மரத்தினடியில் ஒதுங்க வேண்டாம். ஈரமான மற்றும் உயரமான மரங்கள் மின்னலை ஈர்க்கும் தன்மையுள்ளவையால் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும்.

2. நீங்கள் பாதுகாப்பான தங்குமிடம் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், அந்த பகுதியில் அமைந்துள்ள மிக உயரமான பொருள்களை தவிர்க்கவும். தனிமைப்படுத்தப்பட்ட மரங்கள் மட்டுமே அருகில் இருந்தால், நீங்கள் தங்களை காத்துக்கொள்ள

திறந்தவெளியில் குனிந்தபடி இருப்பது மிகவும் பாதுகாப்பானது. தனியாக இருக்கும் மரங்களின் உயரத்தை போல் இரு மடங்கு தொலைவிற்கு அப்பால் நீங்கள் பாதுகாப்பாய் விலகி இருக்க வேண்டும்.

3. தண்ணீர் சூழ்ந்த பகுதிகள், நீச்சல்குளங்கள், ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகளில் இருந்தும் படகுகளிலுருந்தும் உடனே வெளியேறிவிடவும்.

4. மின்னல் தாக்கும் போது ஒரு பெரிய உறைவிட கட்டிடமே பாதுகாப்பானது, பிக்னிக் வசிப்பிடம் (சிறிய குடிசை) அல்லது கூரை விடுகள் ஆகிய இடங்கள் மின்னல் தாக்குதலின் போது பாதுகாப்பற்றது.

5. முழுவதுமாக மூடப்பட்ட உலோக வாகனம், கார், டிரக், வேன் ஆகியவை அடுத்த்கட்டமாக பாதுகாப்பானவை. ஆனால் பைக் அல்லது மென்மையான கூரை வாகனம் போன்றவை மின்னல் தாக்குதலின் போது பாதுகாப்பற்றவையாகும். வீடு, பள்ளி, அலுவலக கட்டிடம் அல்லது ஒரு ஷாப்பிங் சென்டர் போன்ற முழுவதும் முடப்பட்ட இடங்கள் பாதுகாப்பானவை.

<u>(உட்புறங்களில்)</u>

6. இடியோசை கேட்கும்போது வசிப்பிடத்திலிருந்து வெளியேற வேண்டாம். மின்னலொளி மற்றும் இடி இடையே கால அவகாச

வினாடிகளை எண்ணி அதை மூன்றால் வகுப்பதன் மூலம், நீங்கள் உங்கள் உத்தேச தூரத்தை இடிவிழும் இடத்திலிருந்து மதிப்பிட முடியும் (KM)

7. மின்சாரம் கடத்தக்கூடிய பொருள்களை விட்டு விலகி இருக்கவும். இடியுடன்கூடிய மழை ஏற்படுகின்ற சமயங்களில் நெருப்பு எரியுமிடம், ரேடியேட்டர், தொலைபேசி, உலோக பைப்புகள், தண்ணீர் தொட்டி, தண்ணீர் குழாய், அடுப்பு போன்ற சாதனங்களை உப்யோகிப்பதை தவிர்க்கவும்.

8. உங்கள் உடலின் ரோமங்கள் எழுந்து நின்றாலோ அல்லது உங்களின் தோலில் கூச்சம் ஏற்பட்டாலோ அவ்விடத்தின் அருகில் உடனே மின்னல் தாக்க வாய்ப்புள்ளது என்று பொருள். உடனடியாக உங்களின் காதுகளை மூடிக்கொண்டு தரையில் குனித்து கொள்ளவும்.

9. ஜன்னல்கள் மற்றும் கதவுகள் அருகிலிருந்து விலகி இருக்கவும்.

10. உலோக குழாய்களை தொடுவதை தவிர்க்கவும். கைகளை கழுவுவது, குளிப்பது, பாத்திரங்களை கழுவுவது மற்றும் துணிகளை துவைப்பது, கம்பிகளில் துணிகளை காயவைப்பது போன்ற செயல்களில் ஈடுபடவேண்டாம்.

11. தொலைக்காட்சிப்பெட்டிகள், நீர்த்தொட்டிகள், குழாய்கள், மற்றும் அடுப்புகள் ஆகியவற்றிலிருந்து விலகி நிற்கவும் மற்றும் அவற்றின் உபயோகத்தை தவிர்க்கவும்.

## செய்யக்கூடாதவைகள்

1. மின்சாரத்தால் இயங்க கூடிய எந்த ஒரு பொருளையும் அதாவது முடி உலர்த்தும் சாதனம் (ஹேர் டிரையர்) மின்சார பல்துலக்கி, மின்சார ரேசர் போன்ற கருவிகளை பயன்படுத்த கூடாது. ஏனென்றால், மின்னல் உங்கள் வீட்டை தாக்கும்போது, இந்த பொருள்கள் உங்கள் உடம்பில் மின்சாரத்தை செலுத்தக்கூடும்.

2. இடி மின்னலின் போது தொலைபேசியைப் பயன்படுத்தாதீர்கள். ஏனென்றால், வெளியேயுள்ள தொலைபேசி கம்பிகளை மின்னல் தாக்கக்கூடும்.

3. உலோக பொருளை வெளியே பயன்படுத்த வேண்டாம்.

4. முழுமையாக மூடப்படாத கட்டிடங்கள் கீழ் தங்குமிடம் பெற வேண்டாம்

5. தரையில் படுக்க வேண்டாம்

6. வெளியிடங்களில் மின்னல் தாக்கும்போது குழுவாக நிற்க வேண்டாம். தனித்தனியாக பரவி விலகி நிற்கவும்

**மின்னல் தாக்கியபின் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள்**

- மின்னல் தாக்கியதால் பாதிக்கப்பட்ட நபருக்கு தேவையேற்படின் இதய இயக்க மீட்பு சிகிச்சை (CPR) அதாவது செயற்கை சுவாசம் உடனடியாக அளிக்கப்பட வேண்டும்.
- உடனடியாக மருத்துவ உதவி அளிக்கப்பட வேண்டும்.